DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.209/2023 | Deposition of Witness for : PW1 |
| Name : சாரதி | Father/Husband Name : ஜெயகோபால் |
| Age : 42 | Village : கோவில் குடியிருப்பு தேரிப்பனை |
| Taluk : ஏரல் | Calling : இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20 July 2026.

Accused A1 present. A2 died. A3 absent. Petition U/s. 317 Cr.P.C filed and allowed.

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சம்பவம் நடந்து எவ்வளவு நாள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்த அன்று புகார் கொடுத்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 31.03.2023 என்றால் சரிதான். அப்போது நேரம் எவ்வளவு இருக்கும் என்றால் காலை 7.30 மணி இருக்கும். நான் 7.30 மணிக்கு சம்பவம் நடந்தவுடன் எவ்வளவு நேரம் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் உடனடியாக 100 க்கு போன் செய்தேன், பின்பு உடனடியாக காவல்நிலையத்திற்கும் புகார் அளிக்க சென்றேன். நான் காவல்நிலையத்திற்கு செல்லும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் மதியம் 3.00 மணிக்கு காவல்நிலையத்திற்கு புகார் அளிக்க சென்றேன் என நினைக்கிறேன், அப்போதே புகார் மனு காவல்நியைத்தில் அளித்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. காவல்நியைத்தில் சம்பவம் நடந்த இடம் எனக்கு பாத்தியப்பட்ட இடம் என காவல்நியைத்தில் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். இந்த வழக்கிலும் சம்பவம் நடந்த இடம் எனக்கு சொந்தமான இடம் என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்களை சமர்பித்தேனா என்றால் சமர்ப்பித்துள்ளேன். நான் இந்த வழக்கில் எனக்கு பாத்தியப்பட்ட இடம் என்று சொல்லப்படும் இடம் வருவாய் துறை ஆவணங்களின்படி எனக்கு பாத்தியப்பட்ட இடம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் இந்த வழக்கின் 1 வது எதிரிக்கு அவரது தகப்பனார் மரியமாணிக்கம் எழுதி கொடுத்த பத்திரத்தின்படி பாத்தியப்பட்ட இடம் என்றால் சரியல்ல. மேற்படி இடத்தில் எனக்கு எந்த விதமான பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய மாமனார் பெயர் என்னவென்றால் கணேசன் அவருடைய தகப்பனார் பெயர் கோவில்பிள்ளை என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண். 485/2A47 என்ற பட்டாவில் எனது மாமனார் கோவில்பிள்ளை மகன் கணேசன் என்பவர் பெயரும் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கூட்டுப்பட்டா ஆவணத்தில் எதிரிகளின் பெயரோ, அவர்களது அப்பாவின் பெயரோ இல்லை என்றால் சரிதான்.

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.07.20 13:26:39 +0530

485/2A37 பட்டாவும் அரசாங்கம் வழங்கிய கூட்டுப்பட்டா என்றால் சரிதான், அதில் எதிரி மரியஜேசுபால் பெயரும், அவருடைய அப்பா மரியமாணிக்கம் என்பவது பெயரும் உள்ளது என்றால் சரிதான். புகாரில் நான் சொல்லியுள்ள இடம் எனக்கு பாத்தியப்பட்ட இடம் இல்லை, அது எதிரிக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரியல்ல, சம்பவம் நடந்த இடம் எங்களுடைய இடம் ஆகும் அதற்கான பத்திரமும் எங்களிடம் உள்ளது ஆனால் அந்த இடத்தினை சர்வே செய்யும் போது எப்படியோ மாறி எதிரியின் பெயர் அந்த சர்வே எண்ணில் வந்துள்ளது, எங்களிடம் அந்த இடத்திற்கான பத்திரமும் உள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் கிராம நிர்வாக அலுவலர் நம்பர் 28, வெள்ளமடம் கிராமம், ஏரல் வட்டம் என்பவர் அளித்த அடங்கல் ஆவணம் என்றால் சரிதான். **அந்த ஆவணமானது எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணத்தில் வெள்ளமடம் கிராமம் சர்வே எண். 485/2A37 என்ற 40 செண்ட் இடம் மரியமாணிக்கம் மகன் மரிய ஜேசுபால் என்பவருக்கு கிரையம் மூலம் பத்திரப்படி பாத்தியப்பட்டுள்ளது என்று கிராம நிர்வாக அலுவலர் வெள்ளமடம் அவர்களால் சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் என்னுடைய முதல் விசாரணையிலும், வழக்கிலும், புகாரிலும் சொல்லப்பட்ட இடம் எனக்கு பாத்தியப்பட்ட இடம் இல்லை என்றாலும், பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. என்னுடைய புகாரிலும், முதல் விசாரணையிலும் சொல்லியதுபோல் எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் எந்த விதமான பொருட்களும் எதிரிகளால் சேதப்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் புகார் அளித்ததற்கு முன்பே இந்த எதிரிகள் மீது நாசரேத் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் இல்லை. காவல்நிலையத்தில் பணியில் இருந்த உதவி ஆய்வாளரின் உத்தரவிற்கு எதிரி கட்டுப்படவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளரால் தயாரிக்கப்பட்ட புகார்மனுவில் கையெழுத்திட்டேன் என்றால் சரியல்ல. 28.03.2023 அன்று பொருட்களை உடைத்தார்கள். 31.03.2023 அன்றும் எதிரிகள் பொருட்களை உடைத்தார்கள் எனவே அன்றைய தினம் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். புகார்மனுவை யார் எழுதினார்கள் என்றால் என்னுடைய வழக்கறிஞர் எழுதினார். நான் வழக்கு சம்பவத்தின்போது எங்கு குடியிருந்து வந்தேன் என்றால் கோவில்குடியிருப்பில் குடியிருந்து வந்தேன். தற்போது கோவில்குடியிருப்பில் குடியிருந்து வருகிறேனா என்றால் சென்னையில் குடியிருந்து வருகிறேன். சாட்சி அ.சா.2 சித்திரைகுமார் என்பவருக்கு வடக்கு நல்லூர் என்றால் சரிதான். வடக்கு நல்லூர் என்ற ஊர் திருச்செந்தூர் தாலுகாவிற்கு உட்பட்ட பகுதி என்றால் சரிதான். எங்களுடைய ஊருக்கும் வடக்கு நல்லூருக்கும் சுமார் எத்தனை கிலோ மீட்டர் என்றால் தெரியாது. என்னுடைய ஊருக்கும் நாசரேத்திற்கும் எவ்வளவு துரம் இருக்கும் என்றால் 7 கி.மீ இருக்கும். நாசரேத்திலிருந்து வடக்கு நல்லூருக்கு 7 கி.மீ இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. அ.சா.2 ம் என்னுடன் புகார் அளிக்க காவல்நிலையத்திற்கு வந்தார் என்றால் சரிதான். அ.சா.2 எத்தனை நாட்கள் என்னுடைய ஊரில் இருந்தார் என்றால் அவர் என்னுடைய ஊரில் இல்லை. அ.சா.2 என்னுடைய உடன்பிறந்த சகோதரரா என்றால் இல்லை எனது கணவரின் அத்தை மகன் ஆவார். இந்த சம்பவத்தின்போது நெருங்கிய உறவினர்கள் உள்ளூரில் இருந்தர்கள் என்றால் சரிதான் ஆனால் அவர்களுக்கு

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.07.20 13:26:46 +0530

சம்பவம் தெரியாது என்றால் சரிதான். முதல் தடவை புகார் கொடுக்க செல்லும் போது அ.சா.2 காவல்நிலையத்திற்கு வந்தாரா என்றால் வரவில்லை ஆனால் நான் விபரத்தை அவரிடம் சொன்னேன். இரண்டாவது முறை புகார் அளித்தபோது அ.சா.2 என்னுடன் காவல்நிலையத்திற்கு வந்தார் என்றால் சரிதான். நான் அ.சா.2 காவல்நிலையத்திற்கு வந்தார், சம்பவ இடத்தில் இருந்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெறவில்லை என்பதால்தான் உள்ளூரில் உள்ள நபர்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. உள்நோக்கத்துடன் போடப்பட்ட வழக்கு என்பதால்தான் என்னுடைய உறவினரான அ.சா.2 ஐ இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. போலீசார் இந்த வழக்கை எப்போது பதிவு செய்தார்கள் என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் நான் புகார் கொடுத்ததற்கு மறுநாள் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் வழக்கறிஞரை அழைத்து சென்று, வழக்கறிஞர் பரிந்துரையின் அடிப்படையில் உதவி ஆய்வாளர் வழக்கை பொய்யாக வழக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் இந்த வழக்கில் எனக்கு ஆதரவாக ஒரு தலைபட்சமாக செயல்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சிவில் சம்பந்தமான பிரச்சனையில் எதிரிகளை பழிவாங்கி பணிய வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. (3 வது எதிரி தனது தரப்பு குறுக்கு விசாரணையாக 1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்)

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.20 13:26:53 +0530

Judicial Magistrate, Sathankulam.